

காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணு

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 மார்கழி 1 (16-12-73) | இதழ்: 23

★

உள்ளே......

பறக்கும் குதிரை!
(தம்பிக்கு அண்ணுவின் மடல்)

★

அண்ணு அறிவாலயம்
(தலையங்கம்)

★

மறு வாழ்வு
(குறுநாவல்)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)

★

விலங்கென வாழுவதோ?

கவிஞர் மணிவேந்தன்

★

வீரத் தமிழக நாட்டில் பிறந்தோம்
விலங்கென வாழுவ தோ?—நம்
தீரத் திணைச்சில தீய குணத்தவர்
தீய்க்க நினைப்பது வோ?

இங்குள்ள செல்வம் அனைத்தும் கொடியோர்
எடுத்துக் கொழுப்பது வோ?—அவர்
சிங்க மரபினர் தம்மை அடக்கிச்
சிரித்து மகிழுவ தோ?

பண்டைய நாளினில் பார்த்தவர் போற்றிட
பண்புடன் வாழ்ந்தவர் நாம்—இன்று
அண்டைய நாட்டினர் தூற்றிடக் கண்டும்
அவலமாய் வாழுவ தோ?

கன்னித் தமிழினத் தாய்மகிழ் வெய்திடும்
காட்சியைக் கண்டிடு வோம்—நம்
பொன்னி பொருநை சிறப்புடன் நாட்டினில்
பொங்கிடக் கண்டிடு வோம்!

விலை: 0-25 காசு

இளைய தலைமுறையின் எழுச்சிக் குரல்:

மாநில சுயாட்சி நாட்டுக்கு நன்மை பயக்கும்

சு. மேரி ரோஸ் சந்திரா,

(புகுமுக வகுப்பு, ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி, சென்னை.)

கன்னித் தமிழே! கலைக்கொலுவே! என்தாயே!
உன்னைப் பணிந்தேன் உவந்து!
வல்ல நடுவணரே! வந்துள்ள சான்றோரே!
நல்வணக்கம் தந்தேன் நயந்து!

மாநில சுயாட்சி நாட்டிற்கு நன்மை பயக்கும் என்று சொல்லும் நாங்கள், தேன்தான் அது; இனிக்கிறது! என்று சொல்கிறோம்.

மாநில சுயாட்சி நாட்டிற்கு நன்மை பயக்காது என்று சொல்லும் தோழர்கள், நண்பர்கள், நல்லவர்கள், தேன் கசக்கிறது என்கிறார்கள். 'ஏன்?' என்று கேட்டோம். 'கொடுப்பவர் கரங்களைப் பாருங்கள், அவை விரோதியின் கரங்கள், அதனால் தேன் கசக்கிறது' என்கிறார்கள்!

'சுயாட்சி என்னும் முல்லை, நாடென்னும் கொல்லையில் நன்கு மணக்கிறது' என்று நாங்கள் சொல்கிறோம். சுயாட்சி தேவையில்லை என்பவர்கள், அந்த முல்லை மாற்றான் தோட்டத்து முல்லை, மணக்கவில்லை என்கிறார்கள்.

விரோதியின் கரத்தால் கொடுத்த தேன் இனிக்காதா?

மாற்றான் தோட்டத்து முல்லை மணக்காதா?

இதனை எதிரணிக்காரர்கள் உணரவேண்டும். சுயாட்சி தேவையில்லை என்பவர்கள் கேழ்வரகிலிருந்து நெய்வடிகிறபோது வெண்ணெயிலிருந்து ஏன் நெய் எடுக்கவேண்டும்? என்று கேட்பவர்களாவார்கள். அவர்களுக்குத் தெரியும், ஆனால் தெரியவில்லை என்பார்கள். அவர்களுக்குப் புரியும்; ஆனால், புரியவில்லை என்பார்கள். புரிந்துகொள்ளமாட்டேன் என்பவர்களாய், தெரிந்தும் தெரிந்துகொள்ள மாட்டேன் என்பவர்களாய் இருப்பவர்களே சுயாட்சி தேவையில்லை என்பவர்கள்.

இந்திய அரசியல் சட்டத்தில் அதிகாரப்பங்கீடுகள் மூன்று தலைப்புகளில் செய்யப்பட்டிருக்கின்றன.

1. மத்திய அரசுக்கான அதிகாரங்கள்.
2. மாநில அரசுக்கான அதிகாரங்கள்.
3. இரண்டிற்கும் பொதுவான அதிகாரங்கள்.

இந்த அரசியல் பங்கீட்டு முறையில் மாநில முதலமைச்சரான பலர் மக்களுக்குத் தாம் நினைத்த நன்மைகளைச் செய்ய முடியாத நிலை உருவாகியபோது மனங்கசிந்து, கண்ணீர்மல்கி மாநில சுயாட்சி தேவை என்று இயம்பினர். வீரேந்திரபட்டீல் வீறுகொண்டு எழுந்தார்; பட்நாய்க் போர்க்குரல் எழுப்பினார்; நம்பூதிரிபாடு கூக்குரல் கொடுத்தார்; இவர்கள் எல்லாம் என்ன தி. மு. க. வா? ஆகவே, மாநில சுயாட்சிக் கோரிக்கை நிர்வாகத் தேவையின் விளைவாக எழுந்த கோரிக்கையே தவிர அது பொய்யில்லை! கனவில்லை; பழங்கதையில்லை.

நமக்கு வேண்டியது நாடு; நாட்டின் நலன். அதற்கு மாநில சுயாட்சி அணிகலன், என்று கொள்ள வேண்டியது அனைவரின் கடமை.

எல்லா மாநிலங்களும் அளிக்கின்ற வரியிலிருந்துதான் மத்திய அரசிற்கு நிதி உருவாகிறது. என்றாலும், அதை மாநிலங்களுக்குக் கடனாகக் கொடுத்து வட்டி வாங்கும் விநோதம் இங்குதான் இருக்கிறது. அதை உலகம் பார்த்துச் சிரிப்பாய்ச் சிரிக்கிறது.

மாநில சுயாட்சி ஏற்பட்டால் நாட்டின் ஒருமைப்பாடு பாதிக்கப்படும், நாடு துண்டிக்கப்படும் என்று சிலர் கதைக்கின்றனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று வாழ்ந்த தமிழன் துணைக்கண்டமான இந்தியாவைத் துண்டாட ஒருபோதும் துணிய மாட்டான், இந்தியாவின் ஒற்றுமைக்குத் தோள் கொடுப்போம் என்றே கொண்டாடுவான்!

நாம் இந்துஸ்தான்! நமக்கு எந்தஸ்தானமும் நிகரில்லை! ஆனால் நம் எல்லையிலே, முல்லைக்கொடியிலே பாகிஸ்தான்.

அது சில பல நாட்களுக்குமுன் ஆனது துப்பாக்கிஸ்தான் என்று!

'உம் தடைகண்டு, வீரநடைகண்டு, இரத்தமடைகண்டு, பீரங்கிப் படைகண்டு யாரும் நடுநடுங்கவில்லை' என்று எழுந்தது நம் படை விண்ணிலே, மண்ணிலே, தண்ணீரிலே! செங்குருதி ஆழி, திரியும் திமிங்கமமாய்ச் சீறி எதிரியை அதிரவோடச் செய்தோம் அல்லவா? மாநில சுயாட்சி பெற்றால், இனியும் போர் ஏற்படின் சிறப்பாகப் பொறுப்பாகச் செய்வோம்!

மத்திய அரசின் பழமை மாநில அரசை வெருட்டுகின்றது; மாநில அரசின் புதுமை மத்திய அரசை மருட்டுகின்றது.

இந்தப் பழமையும் புதுமையும் இணையாததால் நல்லவித ஆட்சி ஒளியிழந்து இருளாக உள்ளது. எனவே, மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதனால் எந்தவித அரசியல் கற்பும் கெட்டுவிடாது! மாறாக, ஜனநாயகம் வெற்றிக்காவியம் பாடும்; உயிரான ஒருமைப்பாட்டு ஓவியம் காட்சியளிக்கும்.

இன்று என்ன நிலை? அதை எண்ணினால் அது ஜனநாயகக் கொலை!

'மக்கள் குரலே மகேசன் குரல்' என்றிருப்பதே ஜனநாயகம். என்றாலும் இன்று பெரும்பான்மையான பலத்தோடு, மக்கள் வாக்களித்து, தேர்தலிலே வாழ்த்தளித்து அமைக்கப்பட்டு மாநில அமைச்சரவை 'மத்திய அரசு' என்னும் மகேசனுக்குப் பிடிக்கவில்லை என்றால், அது தன் நெற்றி ஒற்றைக் கண்ணைக் காட்டிச் சுட்டெரித்து விடலாம், கலைத்துவிடலாம் என்றால் இன்றைய இந்திய ஜனநாயகத்தில் மக்களின் வாக்குரிமைக்குத் தரப்படும் மரியாதை எத்தகைய தரத்தினது என்பது நன்கு விளங்கும். எனவே, வாக்குரிமையைக் காக்க, ஜனநாயகத்தைத் தூய்மையாக்க மாநில சுயாட்சி கட்டாயம் தேவை!

விலைவாசியைக் குறைப்போம் என்றால், அதற்கும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி வார இதழ்
நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 16—12—73 | இதழ் 23

அண்ணா அறிவாலயம்

தூங்கிக்கிடந்த தமிழகத்தைத் தட்டி எழுப்பிய தமிழினத் தலைவர் — ஏங்கிக் கிடந்த ஏழையர்களின் வாழ்வில் ஒளியேற்ற வந்த உதயசூரியன் — தேங்கிக் கிடந்த அறிவையெல்லாம் தன் திறமையால் ஒன்று திரட்டி, தீட்டிய கூர்ஆயுதமாய் அதனைப் பயன்படுத்தி, வெற்றியினை ஈட்டிய நம் இதய மன்னன்—அண்ணனுக்கோர் ஆலயம்—ஆம்! அறிவாலயம்—அமையவிருப்பது, அண்ணன்பால் உண்மை அன்புகொண்ட அனைவருக்கும் பெருமகிழ்ச்சியை அளிப்பதாகும்.

சிங்காரச் சென்னையில் அண்ணன் பெயர் ஏந்தி, அதனாலே தனிப் புகழ் ஏந்திச் சிறக்கின்ற அழகுச் சாலையில், அண்ணா நினைவாக—அறிவே உருவாக—ஆலயச் சிறப்பாக—அமையவிருக்கும் அறிவாலயம், அவரால் உருவாக்கப்பட்ட உத்தமத் தம்பியரால் உருவாக்கப்படும் **'நன்றி'க்** கோயிலாகும்; பேரறிஞர் அண்ணா அவர்களின் நிலைத்த புகழினைக் காலா காலத்திற்கும் நினைவுபடுத்திக் கொள்ளவிருக்கும் நிரந்தரக் கோயிலாகும்!

ஏறத்தாழ பத்து லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ள பரந்த நிலப்பரப்பில், **"அண்ணா அறிவாலயம்"** நிறுவும் பெருமுயற்சியினை, பேரறிஞர் அண்ணா அவர்கள் **நிறுவிய** கழகமே மேற்கொண்டிருப்பது அண்ணாபால் கொண்டுள்ள உண்மை அன்பினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

'அண்ணா அறிவாலயம்' அமையவிருக்கும் எல்லைக்குள்,

—அண்ணா நினைவாக ஒரு மணிமண்டபம்

—அண்ணா பெயரால் ஒரு கலையரங்கம்

—அண்ணா புகழ் சொல்லும் ஒரு நூல் நிலையம்

—அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களை ஆய்வு செய்ய ஓர் ஆராய்ச்சி நிலையம்

—அண்ணா பற்றிய ஆராய்ச்சிகளை வெளியிட ஒரு வெளியீட்டு நிலையம்

எனப் பல்வேறு அமைப்புக்கள் உருவாகவிருக்கின்றன—அதனை உருவாக்கும் முயற்சியில் கழகத் தலைவர் **கலைஞர்** அவர்களும், கழகப் பொதுச்செயலாளர் **நாவலர்** அவர்களும் முனைந்து செயல்பட்டு வருகின்றனர்.

8—12—73 அன்று காஞ்சிபுரம் அண்ணா அரங்கத்தில் நடைபெற்ற அண்ணா அறிவாலய நிதிச் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட கழகப் பொதுச்செயலாளர் **நாவலர்** அவர்கள் 'அண்ணா அறிவாலய' **அமைப்பு** பற்றித் தெரிவித்த கருத்துக்களே மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை ஆகும்.

டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில் பல்வேறு அண்ணா அறிவாலய நிதிச் சிறப்புக் கூட்டங்களில் கலந்துகொள்ள விருக்கும், கழகத் தலைவர் **கலைஞர்** அவர்கள் 'முரசொலி' மூலம் விடுத்துள்ள வேண்டுகோள், அண்ணாபால் உண்மை அன்பு கொண்டுள்ள அனைவரின் கவனத்தையும் கவரும் தனி முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

"......அறிவாலயம் — நம்மை ஆளாக்கிய அண்ணனுக்கு மிகப் பிடித்தமான பெயர். அந்த அறிவாலயத்தில் அண்ணனின் சிந்தனைக் கனவுகள் பலவற்றைச் செயல்படுத்த, நீ அள்ளிக் குவித்திடுக நிதியை! பம்பரமெனப் பணியாற்றும் என் அன்புக் கண்மணியே, உன் ஆற்றலையும் அண்ணன்பால் கொண்ட உண்மை அன்பினையும் வெளிப்படுத்தக் கிடைத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்!"

என உடன்பிறப்புக்களுக்கு அவர் விடுத்துள்ள வேண்டுகோள், அனைவர் உள்ளத்தையும் உருக்குவதாகும்; உருவாகவிருக்கும் அண்ணா அறிவாலய நிதிக்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தை ஊட்டுவதாகும்!

"அண்ணா அறிவாலயம்" அமையத் தாராளமாக நிதியுதவி செய்ய வேண்டியது, அண்ணன் அமைத்த கழகப் பாசறையில் உலாவரும் காளையர் அனைவரது கடமையுமாகும்.

அக்கடமையைச் செய்வோம்! 'அண்ணா அறிவாலயம்' அமைப்போம்! அவர் அமைத்த அரசைக் காப்போம்!

—மணிவேந்தன்

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசின் தலைவாயிலில் எழுதிப் போட்டிருக்கும் விலைவாசிப் பட்டியலைப் பார்த்துத்தான் செய்யவேண்டும்!

தமிழ்நாட்டிலே போக்குவரத்துப் பெருவழி அமைக்க வேண்டுமானால், அதற்கு ஒரேவழி, மத்திய அரசின் கருணைக் கடைவிழி நம்மீது விழவேண்டும்! இல்லையேல் வேறு இல்லை வழி!

மத்திய அரசின் நித்திய கல்யாண குணங்களுக்கு, ருத்திர தாண்டவ நிலைக்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டு.

தமிழ் நாட்டின் புகைவண்டி நிலையத்தின் பெயரை மாற்ற, நிலையத்தை அன்று, நிலையத்தின் பெயரைக்கூட மாற்ற மத்திய அரசின் ஒப்புதல் பெற்றே தீரவேண்டும் என்று அரசியல் திருவாசகம் கூறுகிறது. அதற்கு மாநில அரசு மறுவாசகம் கூறாமல் குமுறுகிறது!

வெள்ளையனை எதிர்த்தெழுந்தது விடுதலைப் போராட்டம்! அன்று பாரதமக்கள் கொதித்தெழுந்தார்கள்!

தேமா புளிமா தேடிய கவிஞர்கள்
பாய்மா கைம்மா தேடி னார்கள்!
இரத்தினம் மரகதம் விலை பேசினோர்கள்
இரத்தத்தை அன்று விலை பேசினார்கள்!
பாலாவி ஆடைப் பதம் உணர்ந்தோர்கள்
வேலாவி குடிக்கும் விதம் கற்றார்கள்!

அவர்களுள் ஒரு வீரன் வாஞ்சி; அவன் சூடினான் வஞ்சி! இதயத்தை இரும்பாக்கி இடையிலே மறைத்திட்டான் துப்பாக்கி!

மணியாச்சியிலே வெள்ளைத்துரை வாஞ்சியின் கண்களில் பட்டான்; உடன் வாஞ்சி அவனைச் சுட்டான். தன்னையும் சுட்டுக்கொண்டான்! அவன் தலை தெறித்தது! இல்லை! ஆங்கிலேயன் பாரதத் தாய்க்கு இட்ட தளை தெறித்தது! அவன் நினைவாக 'மணியாச்சி' சந்திப்பை 'வீரவாஞ்சி' நிலையம் என்று மாற்றவேண்டும் என மாநில அரசு மத்திய அரசைக் கேட்டது. அதனை நடுவிலுள்ள அந்த மேலிடம் 'Petty politics' என்று கூறி நிராகரித்து விட்டது என்றால், நமக்குள்ள உரிமை என்ன?

இத்தகைய இழிநிலை, அவலநிலை மாநிலங்களுக்கு ஏற்படாதிருக்கவே சுயாட்சி கேட்கிறோம். சுயாட்சி பெற்றால் நாடு தேன் கூடாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

எனவே, அடர்ந்து, படர்ந்து கொழுந்தோடியுள்ள மத்திய ஆலின் கீழ் மாநிலச் செடிகள் வளர முடியவில்லை. ஆதலால் ஒரு சில கிளைகளையேனும் வெட்டுங்கள் என்பதே சுயாட்சி!

சாவிக்கொத்தை இடுப்பிலே வைத்திருக்கும் மாமியார்தான் மத்திய அரசு!

ஒரு சில சாவிகளையேனும் எங்களிடம் கொடுங்கள் என்று கேட்கும் மருமகளே சுயாட்சி!

இத்தகைய சுயாட்சி மலர்ந்தால், ஒவ்வொரு மாநிலமும் வானிலமாகும்! தொழில் வளரும்! பொருளாதாரம் பொலியும்! உண்மையான ஒருமைப்பாடு உறுதிப்பாட்டுடன் இலங்கும்; நாடு விளங்கும்! நன்றி!

(இக்கட்டுரை மாணவர் மன்றம் நடத்திய வீரத் தமிழன்னை டாக்டர் தருமாம்மாள் சுழல்கேடயப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசு பெற்றது)

நன்றி:—நித்திலக்குவியல்.

சிலேடை

(வினா — விடை)

— செ. ஆடலரசு —

வினா:-மனிதன் மானத்தைக் காப்பது என்ன?
மாரியம்மனுக்கு அடிப்பது என்ன?

விடை:-மனிதன் மானத்தைக் காப்பது உடுக்கை!
மாரியம்மனுக்கு அடிப்பது உடுக்கை!

வினா:-அரசர் முடியில் ஒளிர்வது என்ன?
அம்மா விரும்பித் தருவது என்ன?

விடை:-அரசர் முடியில் ஒளிர்வது முத்து!
அம்மா விரும்பி தருவது முத்து!

வினா:-படிக்காதவர்கள் வாங்குவது என்ன?
பறக்கும் கோழி போடுவது என்ன?

விடை:-படிக்காதவர்கள் வாங்குவது முட்டை!
பறக்கும் கோழி போடுவது முட்டை!

வினா:-வேலன் ஔவைக்குக் கொடுத்தது என்ன?
விரும்பிப் பெண்கள் படிப்பது என்ன?

விடை:-வேலன் ஔவைக்குக் கொடுத்தது நாவல்!
விரும்பிப் பெண்கள் படிப்பது நாவல்!

வினா:-மரகதச் சோலையின் மாப்பிள்ளை யாரு?
மத்தகம் உடைய மிருகத்தைக் கூறு.

விடை:-மரகதச் சோலையின் மாப்பிள்ளை தும்பி!
மத்தகம் உடைய மிருகமோ தும்பி!

வினா:-போடும் நெல்லை அளப்பது என்ன?
பொய்க்கால் ஆட்டக் கருவிதான் என்ன?

விடை:-போடும் நெல்லை அளப்பது மரக்கால்!
பொய்க்கால் ஆட்டக் கருவியோ மரக்கால்!

வினா:-கொஞ்சும் பூக்கள் குடியிருப்பு என்ன?
கோட்டைக்(கு) அருகே அசைவன என்ன?

விடை:-கொஞ்சும் பூக்கள் குடியிருப்பு கொடிகள்!
கோட்டைக்(கு) அருகே அசைவன கொடிகள்!

வினா:-பாண்டியர் தமிழுக்குக் கண்டது என்ன?
போர்க்களத்திலே ஊதுகின்றது என்ன?

விடை:-பாண்டியர் தமிழுக்குக் கண்டது சங்கு!
போர்க்களத்திலே ஊதுகின்றது சங்கு!

வினா:-கொடுங்கோல் ஆட்சியை முடிப்பது என்ன?
குமுறும் உள்ளங்கள் வடிப்பது என்ன?

விடை:-கொடுங்கோல் ஆட்சியை முடிப்பது கண்ணீர்!
குமுறும் உள்ளங்கள் வடிப்பது கண்ணீர்!

தம்பிக்கு மடல்



தம்பி,

வெகு வேகமாகக் கிளம்பி, மிக முடுக்குடன் பேசி, வழக்கறிஞர்களையும் மருத்துவர்களையும் பொதுவாகப் படித்தவர்களையும் காங்கிரசுக்குள் கொண்டுவந்து சேர்த்துவிடப் போவதாகச் சூள் உரைத்து, பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது என்பதைக் கண்டறிவதாக அறிவித்து; ஆரவாரத்துடன் நமது கழகத்தை ஏசி வந்த, முன்னாள் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், ஏன் திடீரென்று வாய் மூடிக்கொண்டு விட்டார்; கூவி விற்றிட இருந்த சரக்கு தீர்ந்துபோய் விட்டதா! அல்லது விற்பனை எதிர்பார்த்த விதமாக நடைபெறாததால், 'கடை'யை மூடிவிட்டாரா? என்ன காரணம் அந்த 'மேதை'யின் சந்தடி அதிகமாகக் காணோமே? என்று நண்பரொருவர் கேட்டார். உடனிருந்த மற்றோர் நண்பர் — அவர் பெரியார் கட்சி—ஒரு நேர்த்தியான புன்னகையை உதிர்த்துவிட்டுச் சொன்னார்,

> காரணம் விளங்கவில்லையா? அய்யா, ஒரு ஜாடை காட்டினார், காமராஜருக்கு; போயும் போயும் இந்த ஆசாமியையா நம்புகிறாய் என்பதாக; உடனே காமராஜர், கிருஷ்ணமாச்சாரியாரைக் கூப்பிட்டு "போதும் அய்யரே! உம்முடைய வேலை!" என்று சொல்லிவிட்டார்!

என்று விளக்கம் அளித்தார்.

"அப்படி ஒரு மனப்பால் குடிப்பதானால் குடித்தபடி இரும்!" என்று கூறிவிட்டு, ஒரு கனைப்பு, ஒரு முறைப்புடன், மற்றோர் நண்பர் பேசலானார்; அவர் காங்கிரசை ஆதரிப்பவர்:

> பெரியார் சொல்லுவதைக் கேட்டு அதன்படி நடந்திடவா எங்கள் பெரியவர் இருக்கிறார்! அவர் என்ன பெரியாரைப் போல, பிராமணர்களைப் பார்ப்பான் என்று பேசிடும் போக்கினரா? எத்தனையோ கீர்த்திமிக்க அய்யர் — அய்யங்கார் — சாஸ்திரி — சர்மாக்கள் — காமராஜருக்கு நண்பர்கள்! டி. டி. கே. இப்போது அதிகமாகப் பேசப் போவதில்லை; காரணம், அவர் காங்கிரஸ் சர்க்காரின் நிலைமையிலே ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், அதிர்ச்சிகள் ஆகியவைபற்றி அதிகக் கவலைகொண்டுள்ளார். இருக்குமல்லவா! பாருங்கள், இப்போது இந்த நந்தா விலகிவிட்டார்; இந்திரா காந்தியார் உடனே, அனுபவம் மிக்க டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அழைத்துப் பொறுப்பை ஒப்புவிக்க வேண்டுமல்லவா? செய்தாரா? இல்லையே! அதைப் பார்க்கும்போது அவருடைய மனம் வேதனையாகத்தானே இருக்கும்—என்றார்.

நான், எந்த ஒரு விளக்கமும் கொடுக்காமலிருக்கக் கண்ட அவர்கள், என்னைப் பார்த்தபடி "உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார்கள்.

"திட்டவட்டமாக ஏதும் கூறமுடியாது; ஆனால் ஒரு எண்ணம் தோன்றுகிறது, எனக்கு, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், காங்கிரசுக்காகப் பிரசாரம் செய்வது, அதிலும் சோஷியலிசம் பேசுவது, கேட்பவர்களுக்கே ஏதோ ஒரு கேலிக் கூத்து போல இருப்பதை அவரே உணர்ந்துகொண்டுதான், தமது பிரசார வேகத்தைக் குறைத்துக் கொண்டிருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன்" என்று நான் கூறினேன்.

எதையாவது சொல்லிவைக்கலாம் என்ற போக்கிலே சொல்லவில்லை. உள்ளபடி, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள், சோஷியலிசம் பேசுவதைக் கேட்கும்போது, மக்கள் ஒரு கேலிச் சிரிப்பொலிதான் எழுப்புகிறார்கள்.

> காங்கிரசிலே 'தூண்களாக'வும், வலது கரங்களாகவும் உள்ளவர்கள், எப்படிப்பட்ட முதலாளிகள் என்பதை நமது கழகப் பேச்சாளர் எடுத்து விளக்கிவிட்டு, இத்தகையவர்களைக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சிதான் சோஷியலிசம் பேசுகிறது என்று கூறும்போது எழும் கையொலி வெறும் ஒலி அல்ல; உணர்ந்திருப்பாய் என்று நம்புகிறேன்.

மக்களுக்கு மயக்கமூட்டும், சொக்கவைக்கும் என்ற நினைப்புடன்தான், பாவம், காங்கிரசின் தலைவர்கள், சோஷியலிசம் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் அந்தத் தத்துவத்திற்குத் தந்திடும் விளக்கம் இருக்கிறதே அதனைக் கேட்டதும், மக்கள் அடைகின்ற எரிச்சலும் ஏமாற்றமும் கொஞ்சமல்ல. இதைத்

பறக்கும் குதிரை!

தான் சோஷியலிசம் என்கிறீர்களா? இவர்களை வைத்துக் கொண்டுதான் சோஷியலிசம் கொண்டு வரப் போகிறீர்களா? இவர்களெல்லாம் இப்போது உள்ளது போலவே இருப்பார்கள். ஆனால் சோஷியலிசமும் இருக்கும் என்கிறீர்களா? ஓநாயும் இருக்கும் முயல்களும் ஓடி ஆடியபடி இருக்கும்; புலியும் இருக்கும் புள்ளிமான்களும் இருக்கும்; அப்படித் தானே இருக்கும் என்கிறீர்கள்!—என்று கேட்கிறார்கள்; வாய் திறந்து அல்ல; தமது குறும்புப் புன்னகையால்; கேலிப் பார்வையால்!

> இதனைக் கண்டறிந்ததால் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வெட்கப்பட்டுக் கொண்டு, சே! நாம் போய் மேடைமீது நின்றுகொண்டு சோஷியலிசம் பேசினால், எப்படி நம்புவார்கள்? வீண் முயற்சி! விளைவு விபரீதமானாலும் ஆகிவிடக்கூடும் என்று எண்ணிக்கொண்டுதான், தமது இடி முழக்கத்தை நிறுத்திக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

மக்கள், தெளிவற்றவர்களாகவே இருந்துவிடுவார்கள்; பசப்பு மொழி கேட்டு மயங்கிவிடுவார்கள்; இரு பொருள் தந்திடும் பேச்சைப் பேசி அவர்களை ஏய்த்துவிடலாம் என்று நினைத்திடும் காங்கிரஸ் தலைவர்கள் உளர்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் பேசும்போது, மக்கள் மிக எளிதாக அவர்கள் பேசும் சோஷியலிசம்,

> வஞ்சகமானது
> பசப்பு மிக்கது
> இருபொருள் கொண்டது

என்பதனை உணர்ந்துகொண்டு விடுகின்றனர்.

மக்கள், உண்மையை உணர்ந்துகொண்டுவிட்டனர் என்பதனைக் கண்டறிந்த பிறகு எப்படி அவர்களுக்குப் பேச இயலும்! கடையைக் கட்டிக்கொள்கிறார்கள்!!

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் பேசிடும் சோஷியலிசம், உண்மையான சோஷியலிசமாக இருக்க முடியாது; ஏனெனில் அவர்களே, முதலாளித்துவ அமைப்பின் பாதுகாவலர்கள்; அந்த அமைப்பிலே இருந்துகொண்டே, மக்களுக்கு இனிப்பளிக்கும் என்பதற்காக சோஷியலிசம் பேசுகிறார்கள் என்பதைப் பொதுமக்கள், அறிந்து கொண்டு விட்டனர்,

> டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமது மின்னல் வேகச் சுற்றுப் பயணத்தை நிறுத்திவிட்டதற்கும்,
>
> காமராஜர்கூட, சோஷியலிசம் என்ற பேச்சுப் பேசி மக்களை மயக்க முடியவில்லை என்பதை உணர்ந்துகொண்டு,
>
> நிலவரியை எடுத்துவிடுகிறேன்!
>
> ஆளுக்கு ஒரு வீடு தருகிறேன்!
>
> பார்க்குமிடம் எங்கும் பள்ளிக்கூடங்கள் கட்டித் தருகிறேன், என்றெல்லாம் பேசி சுவைப் பண்டங்கள் வீசி மக்களை மயக்கலாமா என்று இப்போது முயற்சி செய்திட முனைவதற்கும் இஃதே காரணம்.

★

எல்லோரும் பேசும்விதமாகப் பேசக்கூடாது; பேச்சிலே ஒரு புதுமை வேண்டும்; புதுமுறையாகத் தன் பேச்சு அமையவேண்டும் என்று நினைத்துக் கொண்ட ஒரு வாலிபன், திருமணம் செய்துகொள்ளச் சம்மதம் தரும்படி தன் காதலியிடம் கேட்டிடலானான். எப்படி?

> “கண்ணே நீ என் குழந்தைகளுக்குத் தாயாக வேண்டும்.”

காதல் செய்த எந்தப் ‘பயலும்’ கேட்காதவிதமான பேச்சு இது; மற்றவர் வாழ்க்கைத் தோணியிலே போகலாமா என்றோ, என் மன மாளிகையிலே உள்ளவளே! என் வீட்டின் திருவிளக்குமாக வேண்டும்; சம்மதந்தானே கண்ணே! என்றோ, கேட்டிருப்பார்கள். நாமோ! கேட்டஉடன், அவள் சொக்கிப்போய் விடுவாள்; அப்படியே தோளின்மீது சாய்வாள்; அடிமூச்சுக் குரலாலே, ‘அத்தான்......’ என்பாள், அள்ளி அணைத்திடலாம்; இன்பம் பருகிடலாம்—என்றெல்லாம் அவன் எண்ணிக்கொண்டான்.

ஆனால், கன்னியோ, கடுங்கோபம் கொண்டவளாகி அவனைப் பார்த்து.

> “காதகா! இத்தனைக் காலமும் என்னைக் காதலிப்பதாக ஏமாற்றிக் கொண்டிருந்தாயா! ஏற்கெனவே மணமாகி, குழந்தைகள் உள்ளவனா நீ! என்னை இரண்டாந் தாரமாக்கிக் கொள்ளவா இத்தனை காதல் நாடகமாடினாய்!”

என்றெல்லாம் கடிந்துரைத்துவிட்டு, எழுந்தோடி விட்டாள்!

அவன், புதுமுறையிலே பேசுவதாக எண்ணிக் கொண்டு, கடிமணமாகி, காதற்கனி பிறந்திடும் நிலை பெற்றிடலாம் என்ற கட்டத்தைக் கூறினான்; பெண்ணோ, ‘என் குழந்தைகள்’ — என்று அவன் குறிப்பிட்டது. ஏற்கனவே ஒருவளை மணந்து அவன் பெற்ற குழந்தைகள் என்று எண்ணிக்கொண்டு, எரிச்சலும் ஏமாற்றமும் கொண்டாள்.

தம்பி! சொல்ல நினைப்பதை விளங்கும்படியும், வேறு பொருள் கொண்டிட முடியாத விதத்திலும் கூறிடவேண்டும். இல்லையேல் விபரீதமான விளைவுகள் நேரிடக்கூடும் என்பதனை விளக்கிடும் கதை இது.

> இந்தக் காதலன் வஞ்சகன் அல்ல, புத்திசாலித்தனத்தைக் காட்டிவிட வேண்டும் என்று துடித்திட்ட ஏமாளி.

வஞ்சகன், தன் நிலையை மூடிமறைத்திடமுயலுவான்;

> என் இதயத்தில் முதன்முதலாக இடம் பெற்றவள் நீயே!
>
> இல்லறம் என்ற நல்லறம் நடாத்திடவே உன்னை நாடுகிறேன்!

என்று எதையாவது இனிப்புள்ளதாகக் கூறிவைப்பான். பெண் மயங்கி மனதைப் பறிகொடுத்தான பிறகு, அவன் ஏற்கெனவே வேறோர் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டவன் என்பதனை அறிந்து பதறும்போதுகூட, வஞ்சகன் கூசாமல் கூறிடுவான்,

என் இதயத்தில் அவளுக்கு நான் இடம் அளித்திடவில்லை; வீட்டில் மட்டுந் தான்; அதுவும் பெற்றோர் கொடுத்த தொல்லைக்காக மட்டுமே!

அவள் வீட்டில் இருக்கிறாள். ஆனால், அவளுடன் சேர்ந்து நான் இல்லறம் நடாத்தவில்லை. அதனை நான் முன்பே உனக்குக் கூறினேனே! கவனிக்கவில்லையா?

என் இதயத்தில் முதன் முதலாக இடம் பெற்றவள் நீயே—என்று அன்று சொன்னேன்; இன்றும் அதனையே கூறுகிறேன்; மனைவி என்ற பெயருடன் ஒருவள் என் வீட்டில் இருப்பதாலேயே, என் இதயத்திலும் இருப்பாள் என்று எண்ணிக் கொள்ளலாமா! அங்கு உனக்குத்தான் இடம்! உனக்கு மட்டுந்தான்!

என்று பசப்புவான்; தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்ட பாவை என் செய்வாள்?

இவ்விதமான பேச்சு, இருபொருள் தருவதாக அமைவது; உண்மையை மறைத்திட பொய்மைக்கு ஒரு பொலிவளிக்கும் பூச்சு சேர்த்துத் தந்திடும் முறை.

அவ்விதமான பேச்சு பலன் தரவில்லை என்பதனை உணர்ந்துகொண்ட பிறகு, காங்கிரஸ் தலைவர்களுக்குத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதிலே எப்படித் 'தெம்பு' பிறந்திட முடியும்!

காமராஜரோ, 'தெம்பு' இருக்கிறதோ இல்லையோ இந்த சோஷியலிசப் பேச்சு தவிர, மக்களுக்குச் சுவையூட்டும் பேச்சு வேறு இல்லை என்பதை உணருவதாலே, அதனையே பேசிவருவது என்று தீர்மானித்துவிட்டார். வேறு என்ன செய்வார்!

கட்டிய பள்ளிக்கூடங்களைப் பார்த்தீர்களா? என்று காமராஜர் கேட்டால், கொட்டிக் கொடுத்த வரிப்பணம் கொஞ்சமா? என்று மக்கள் கேட்கிறார்களே! பதில் என்ன சொல்ல முடியும்!!

பார்! பார்! மின்சார விளக்கு பார்!— என்கிறார்; இதைவிட அதிசயத்தைக் காட்டினான் வெள்ளைக்காரன் — ஆகாய விமானமே காட்டினான்! அவன்கூட இப்படி, பார்! பார்! என்று கூவிடவில்லையே என்று மக்கள் எண்ணிக் கொள்கிறார்கள்; காமராஜரின் பேச்சு அவர்கள் மனதிலே அவர் எதிர்பார்க்கின்ற ஒரு களிப்பினை ஊட்டிட முடியவில்லை.

எப்படிப்பட்டவர் தெரியுமா தலைவர்? உலகப் பெருந்தலைவர்!! என்று உடனிருப்போர் உடுக்கை அடிக்கிறார்கள்! ஆமாமய்யா ஆமாம்! அவர் புகழ் ஏறுகிறது, உச்சிக்கு; எங்கள் வயிறு காய்கிறது பட்டினியால்!—என்று மனம் நொந்து கூறுகிறார்கள் மக்கள்.

ஆகவே காமராஜர், காங்கிரசின் சாதனைகள் பற்றிய பட்டியலை நீட்டி, ஓட்டு கேட்டிட முடியவில்லை. தேர்தலிலே நிற்பதற்காக அவர் தேடிப் பிடித்து இழுத்து வந்திடுவோரும், காங்கிரசிலே நீண்ட காலமாக இருந்து பணியாற்றி, இன்னல் இழப்புக்களுக்கு ஆளானவர்கள் அல்ல.

விளைந்த காட்டுக் குருவிகள்!

ஆகவே, இருப்பதற்குள் ஓரளவு சுவையூட்டக் கூடிய பேச்சு, சோஷியலிசம்தான் என்று அவருக்குத் தோன்றுகிறது. ஆகவே ஒரு நாலு கூட்டத்தில் அதுபற்றிப் பேசிப் பார்க்கிறார்.

சோஷியலிசம் பேசுகிறீர்; ஆனால் இத்தனை சீமான்களேயும் உடன்வைத்துக் கொண்டிருக்கிறீர்களே—எப்படி இது பொருந்தும்? மக்கள் நம்புவார்களா? என்று அவரிடம் யாராவது கேட்டால், தம்பி! ஒரு பெரிய வெடிச் சிரிப்பு சிரித்துவிட்டு,

சோஷியலிசம் பேசிவிட்டால், ஓட்டு வந்து குவிந்து விடுமா;

நோட்டுகள் வேண்டாமா—தேர்தலை நடத்த!!

நோட்டுகளை யார் தருவார்கள்? ஓட்டர்களா!;

ஓட்டாண்டிகளிடம் ஏது நோட்டு?

நோட்டுப் பெற்றிட சீமான்கள் தேவைப்படுகிறார்கள்; ஓட்டுவைத்திருக்கும் ஏழைகளுக்குத் தித்திப்புத் தந்திட சோஷியலிசம் பேசவேண்டி இருக்கிறது என்று பச்சையாகவே சொல்லிவிடுவார்! பச்சைத் தமிழரல்லவா!!

தம்பி! காங்கிரஸ் கட்சியின் அமைப்பை எடுத்துக் கொண்டு பார்த்தாலும், காங்கிரஸ் ஆட்சியின் செயல் முறைகளை ஆராய்ந்து பார்த்தாலும், சோஷியலிசம் வருவதற்கான சூழ்நிலையே இல்லை என்பது நன்றாகப் புரிகிறது.

என்றாலும், காமராஜர், சோஷியலிசம் பேசுகிறார்; எந்தத் துணிவு காரணமாக?

அதனை விளக்கிட ஒரு சிறு கதை கூறியாக வேண்டும். தம்பி! கூறட்டுமா?

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன், மன்னன்முன் மண்டியிட்டு, அரசே! ஒரு வேண்டுகோள்; என்னை இப்போதே தூக்கிலே போட்டு விடச் சொல்லாதீர்கள், ஒரு வருடம் எனக்கு அவகாசம் தருக! அதற்குள் நான், தங்கள் பட்டத்துக் குதிரைக்கு 'பறந்திட'க் கற்றுக் கொடுக்கிறேன்; அதனைக் கண்ட பிறகு, எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை தள்ளுபடி செய்துவிடலாம். ஒரு வருடத்திற்குப் பிறகு, குதிரைக்குப் பறக்கும் சக்தி வந்திடச் செய்யத் தவறினால் என்னைத் தூக்கிலே போட்டுவிடுங்கள்' என்று முறையிட்டுக் கொண்டான். மன்னன், குதிரையே பறந்திடுமாமே, பார்ப்போமே என்று எண்ணிக்கொண்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தவனுக்கு ஒரு வருடம் விடுதலை தந்தான்.

மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்ட அந்த தந்திரக்காரனை அவனுடைய நண்பன் பார்த்து, "ஒரு வருடத்தில் குதிரைக்குப் பறக்கும் சக்தி பெற்றுத் தருவதாகக் கூறிவிட்டு, ஒரு வருட விடுதலை பெற்றுக் கொண்டாயே! ஒரு வருடம்

முடிந்ததும், உன்னைத் தூக்கிலே போடாமல் விடுவார்களா? மன்னனுக்கு இப்போது உள்ள கோபத்தைவிட அதிகமாக அல்லவா கோபம் வரும். நம்மை ஒரு ஏமாளி என்று இவன் எண்ணிக் கொண்டான்? தூக்கு மரத்திலே தொங்கட்டும். இவன் உடலைக் கழுகும் நரியும் விருந்தாக ஆக்கிக் கொள்ளட்டும் என்றல்லவா கட்டளை பிறப்பிப்பான்! என்ன செய்வாய் அப்போது! என்று கேட்டான்.

தந்திரக்காரன் சொன்னான்,

ஒரு வருடத்திற்குப் பிறகு நடக்கக் கூடியதுபற்றி இப்போது ஏன் எண்ணிக் கொண்டு வேதனைப்பட வேண்டும்?

தூக்குமேடையில் இருந்து வெளியே வந்திருக்கிறேன்; ஒரு வருடம் அவகாசமும் கிடைத்திருக்கிறது.

இந்த ஒரு வருஷத்திற்குள் அரசனே இறந்துபடக்கூடும்.

அல்லது நானே மடிந்து போகக்கூடும்!

அல்லது குதிரை பறக்க ஆரம்பித்தாலும் ஆரம்பித்துவிடக்கூடும்!!

ஒரு வருடத்தில் என்னென்னமோ நடைபெறலாம்.

நம்பிக்கை கொள்ளவேண்டும்! உடனடியாகக் கிடைத்திடும் பலனைத்தான் கணக்குப் போட்டுப் பார்த்திட வேண்டும் ஒரு வருடத்திலே ஏதேதோ நடக்கலாம்; அதன் காரணமாக, எனக்கு நிபந்தனையற்ற விடுதலை கிடைத்தாலும் கிடைக்கலாம்.

ஒரு வருடத்திற்குப் பிறகு, தூக்கிலே போடுவார்களே என்பதுபற்றி இப்போதே எண்ணி எண்ணி மனம் புண் ஆவானேன்.

ஒரு வருடம் கிடைத்திருக்கிறது! அந்தக் காலத்தில், பெறவேண்டிய வசதியை, வாழ்க்கை இன்பத்தை ஏன் இழந்திட வேண்டும்? என்று கேட்டானாம்.

அதுபோலக் காமராஜர், சோஷியலிசம் கொண்டு வரவில்லையே; முடியாமற் போய்விட்டதே என்று எண்ணி ஏக்கம் கொள்ளாமல், குதிரையைப் பறக்க வைக்கப் போகிறேன் என்று பேசி, மரண தண்டனையைத் தவிர்த்துக் கொண்டவன் போலப் பேசுகிறார், சோஷியலிசம் பற்றி.

சோஷியலிசம் பேசி ஓட்டுகளைப் பறித்துக் கொள்வோம்; முதலில்; பிறகு, சோஷியலிசம் ஏன் கொண்டு வரவில்லை என்று மக்கள் கேட்டுவிட்டுப் போகட்டுமே! கொடுத்த ஓட்டுகளைத் திருப்பியா வாங்கிக் கொள்ள முடியும்!!—என்று அவர் எண்ணுகிறார் என்பது விளங்கவில்லைவா, தம்பி! ஆம், என்கிறாய். மற்றவர்களும் விளக்கம் பெற்றிட வேண்டாமா?

அதற்காகத் தம்பி! சோஷியலிசம் பேசிடும் காமராஜரின் காங்கிரசிலே, எத்தகைய முதலாளிகள் கொலு இருக்கிறார்கள் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டிட வேண்டும்.

★

'வலதுகரம்'—என்றும், தேர்தல் பிரசார பீரங்கி என்றும் கொண்டாடுகிறார்களே, டி. டி. கிருஷ்ண மாச்சாரியாரை; அவருந்தானே பேசுகிறார், சோஷியலிசமே எமது இலட்சியம் என்று; அவர் நிலை என்ன என்பதை நாடு அறிந்துகொள்ள வேண்டாமா?

ஒருவரிடம், வருவாய் தரத்தக்க தொழில், வாணிப அமைப்புகள் குவிந்துவிடுமானால், மக்களின் உழைப்பினால் உற்பத்தியாகும் செல்வத்திலே பெரும் பகுதி, அந்த ஒருவரிடம் போய்ச் சேர்ந்து விடுகிறது. ஏழை பணக்காரன் பேதம், அகன்ற வாய்கொண்ட பெரிய பள்ளமாகிவிடுகிறது.

இதைப் போக்குவதுதானே சோஷியலிசம்?

இதைத்தானே காங்கிரஸ் தனது திட்டமாகக் கொண்டுள்ளதாக, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறுகிறார்.

அப்படியானால், அந்த நேர்த்திமிக்க இலட்சியவாதி எந்த நிலையிலே இருக்கிறார்?

அவருடைய குடும்பத்திடம் உள்ள தொழில் அமைப்புகள் — வருவாய்த் துறைகள் — எப்படி உள்ளன? அளவும் வளமும் எப்படி இருக்கிறது என்பதை நாடு தெரிந்துகொள்ள வேண்டாமா?

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தமக்கு இந்தியப் பேரரசில் கிடைத்திருந்த அமைச்சர் பதவியைப் பயன்படுத்தி, தொழில் அமைப்புகளைப் பெரிதாக்கிக் கொண்டார் என்ற புகார் கிளம்பிற்று.

நான் அந்தப் புகார் பற்றிய நோக்கத்துடன் இதனைக் குறிப்பிடவில்லை.

மிகமிக நியாயமான, நேர்மையான முறைகளிலேயே இந்தத் தொழில் வாணிப அமைப்புகள் வளர்ந்தன என்றே வைத்துக்கொள்வோம்; ஆனால் இவ்வளவு வருவாய்த் துறைகள், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பம் ஒன்றினிடம் இருந்திடலாமா? இருக்கவிடுவது, சோஷியலிசமா? இருக்கும் போது, அவர் சோஷியலிசம் பேசுவதிலே பொருள் தான் உண்டா? என்ற இவைபற்றிச் சிந்தனையைக் கிளறிவிடுவதற்காகவே கூறுகிறேன்.

வெட்டப்பட்டதோ, வெடிப்பு விரிவானதோ, எதுவாக இருந்தால் என்ன; பள்ளம் பள்ளந்தானே!

தம்பி! சோஷியலிசம் பேசிடும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் குடும்பத்திடம் உள்ள தொழில்—

வாணிப அமைப்புகளின் பட்டியல் — எனக்குக் கிடைத்துள்ள அளவு — தருகிறேன்—பார்த்திடு!—காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசம், நம்பத்தகுந்தது தானா என்பதுபற்றிய தெளிவு, தன்னாலே வந்திடும்,

டில்லி
கல்கத்தா
விஜயவாடா
பம்பாய்
விசாகபட்டினம்
சென்னை
ஐதராபாத்
கொச்சி
பெங்களூர்
ஆமதாபாத்
கோயம்புத்தூர்

இத்தனை நகரங்களிலே, டி. டி. கிருஷ்ணமாச்சாரி யாரின் குடும்பத்தாரின் வணிக அமைப்புகள் உள்ளன.

'ஏகபாரதம்' — எத்தனை எழிலுடன் விளங்கு கிறது என்பதனை எடுத்துக் காட்ட, இந்த 'பேரரசு' அமைக்கப்பட்டிருக்கிறது போலும்!

இங்கெல்லாம் உள்ள கம்பெனிகளில், எத்தனை இவர் அமைச்சர் வேலை பெற்ற பிறகு வளர்ந்தன, மூலதனம் எப்படியெப்படி கிடைத்தன என்பன பற்றிய தகவல் அறிந்திட நான் முனையவில்லை.

நான், இந்தப் பிரச்சினையில் ஊழல் இருக் கிறதா, அக்ரமம் நடந்திருக்கிறதா என்ற கேள்வி யிலே என்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை.

எனது நோக்கமெல்லாம், சோஷியலிசம் பேசிடும் ஒருவரின் குடும்பம், பொருளாதாரப் பேரரசு அமைத்து ஆண்டுகொண்டிருக்கும் விந்தையை நாடு அறியச் செய்யவேண்டும் என்பதேயாகும்.

'கொல்லாமை பற்றி உருக்கமான 'உபன்யாசம்' செய்திடும் 'குரு' சாப்பிடும் கோழிப் பிரியாணியின் அளவுபற்றிய தகவலைத்தான் நான் தருகிறேன்; கோழி விலை போட்டு வாங்கியதா, கொல்லைப்புறத் தில் மேயவந்த வேறூர் வீட்டுக் கோழியா, என்பது பற்றிய 'மர்மம்' நான் தரவுமில்லை; எனக்குத் தெரிய வும் தெரியாது. இனி அந்தப் பேரரசைக் காணலாம்.

1. ஓரியண்டல் காஸ்மாடிக்ஸ்
2. T. T. கெமிகல்ஸ்
3. டார்டாய்ஸ் இந்தியா
4. ஓரியண்ட் பர்மா
5. கொப்பா பார்மா
6. ரைட்எய்ட்ஸ், ஓரியண்ட்
7. T. T. லிமிடெட்
8. டைம எய்ட்ஸ், இந்தியா
9. லண்டன் ரப்பர் கம்பெனி
10. பாக்வெல் இண்டஸ்ட்ரீஸ்
11. பிரிசைசன் என்ஜினியர்ஸ்
12. இன்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமன்ட்ஸ்

பனிப்பாவை!

கருமலைப்பழம்நீ

ஒருவெண் மதிமுகம்; கருங்கயற் கண்கள்;
இருவில் இடம்வலம் வளைந்த புருவம்;
மருண்ட பார்வை; மலரிதழ் செவ்வாய்;
இருண்ட முகில்கள் இணைந்த கூந்தல்;
கொண்ட மங்கை குளிர்ந்த பனியில்
கொதிக்கும் நெஞ்சங் கொண்டு குதித்து,
வையம் விழிக்கா வைகறை நேரம்
மையல் முதிர்ந்து, மைவிழி சிவந்து,
தேடி வந்தாள் ஆடிப் பெருக்காய்!
மூடிக் கிடந்த முகத்திரை விலக்கி,
துஞ்சும் என்னைத் தொட்டாள்! விழித்தேன்!
'அஞ்சா திருப்பீர்! அன்பே! நின்பால்
இன்புற வந்தேன்!' என்றாள் பாவை!
இன்பக் கனவா! நினைவா! என்று
கொடியிடைத் தழுவிக் குளிர்விழி கண்டேன்.
ஓடியா திருந்தாள்! உணர்ச்சியில் பூத்தாள்!
'வானைத் தேடி வளர்மதி வரினும்
வண்டைத் தேடி மலரோ?' என்றேன்.
'வண்டினை மறந்தால் வாழ்வே இல்லை!
வந்தது பிழைதான்!' என்றவள் ஊட,
வெள்ளத் தோடு வெள்ளம் போல
வீழ்ந்தேன்! அணைத்தாள்! ஆழ்ந்தோம்
சுகத்தில்!
மார்கழிப் பனியே மங்கை யாகி
வாழ்வினில் இன்பம் வழங்கி னாளே!

13. L. D. ஸேமோர் அண் கோ
14. காட்டரி, ப்ரை இந்தியா
15. செஸ்பிரோ பிராண்டு இந்தியா
16. இந்தூரிஃபாரம்
17. A. K. பார்மா கெமிக்ஸ்டிக்ஸ்
18. T. T. கிருஷ்ணமாச்சாரி கம்பெனி.

தம்பி! பெயர்கள் யாவும் ஆங்கிலம் — நான் செய்த தவறு அல்ல; அந்தக் குடும்பம் பெற்ற பேறு!

இந்த அமைப்புகளுடன், நாடெங்கும் மக்கள் விரும்பி வாங்கிடத்தக்க பல பொருள்களுக்கு, இந்தக் குடும்பம், 'ஏஜன்சி' உரிமை பெற்றிருக்கிறது.

1. உட்வார்ட்ஸ் கிரைப் வாடர்
2. பாண்ட் கிரீம்
3. வாடர்மென் இங்க்; பேனா
4. பிரஸ்டிஜ் குக்கர்
5. வெஸ்ட்கிளாக்ஸ் கடிகாரங்கள்
6. அதுல் உற்பத்திப் பொருள்கள்
7. நவஸரி ஆயில் மில்ஸ்
8. ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
9. பக்கிம்ஹாம் கர்னாடிக் மில்ஸ்
10. குட்லாஸ் வால் பிக்மண்ட் அண்டு ரிஸின்ஸ்
11. காட்பெரி சாக்லட்
12. போர்ன்விடா
13. மாக்ஸ்ஃபாக்டர் காஸ்மாடிக்ஸ்

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

14. எஸ்ஸோவின் பிளிட்
15. மெட்டல் ஸ்ப்ரேயர்கள்
16. டாக்டர் வெஸ்ட்டின் பல் பிரஷ்
17. வில்லியம் ஷேவிங் சோப்
18. காரெட் பிளேடுகள்
19. எபிக் டூத் பேஸ்ட்
20. ஸ்கைலைன் கட்லரி
21. சாயம்—ரசாயனப் பொருள்கள்

அளவும், வகையும் விளங்குகிறதல்லவா, தம்பி!

பிளேடுகூட! பிரஷ்கூட! பல்பசைகூட! பூச்சி மருந்தைக்கூட விடவில்லை!!

இத்தகைய ஒரு பேரரசு இந்தக் குடும்பத்துக்கு. இந்தக் குடும்பத் தலைவர் பேசுவதோ சோஷியலிசம்!! தம்பி! மக்களை ஏமாளிகள் என்றே தீர்மானித்து விட்டிருந்தாலொழிய; பேசிடும் துணிவு பிறந்திடுமா?

இந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், காமராஜருக்கு வலதுகரமாம்!

ராஜதந்திர முறை கூறிடும் மூளையாம்! பேசிக் கொள்கிறார்கள்;

மக்கள் இதனை அறியமாட்டார்களா—இப்படிப் பட்டவர்களைக் கொண்டு இயங்கி வரும் காங்கிரஸ் கட்சி, எப்படி சோஷியலிசத்தைக் கொண்டுவர முடியும் என்று கேட்கமாட்டார்களா என்ற எண்ணம் ஏற்படவே செய்யாதா காமராஜருக்கு? ஏற்படும்!

ஆனால், கதை தந்துள்ளேனே அதுபோல, குதிரையை பறக்கவைக்கிறேன் என்று கூறி, மரண தண்டனையிலிருந்து இப்போதைக்குத் தப்பித்துக் கொள்ளலாம் என்று திட்டமிடுகிறானே தந்திரக்காரன் அதுபோலக் காமராஜர், பின்னாலே என்னவோ நடந்துவிட்டுப் போகட்டும், இப்போதைக்கு சோஷியலிசம் பேசி மக்களை மயக்கி ஓட்டுகளைத் தட்டிக்கொண்டு. காங்கிரசு ஆட்சிக்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக்கொள்வோம் என்று திட்டமிடுகிறார். புரிகிறதல்லவா?

அண்ணன்,

அண்ணாதுரை

13-11-66

குறுநாவல்:

மறு வாழ்வு!

இளங்கீரன்

பண்டார வடிவிலே தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டாலும் செண்பகம் மூட்டிய தீ மட்டும் அவரிடமிருந்து அணையவே இல்லை. அது அவர் மனதில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

வக்கற்று வழியற்று; திக்கற்றுத் திண்டாடி கோயிலை நாடிவரும் பிச்சைக்காரிகளில் பார்வைக்கு நன்ருக இருப்பவர்கள் எப்படியும் அவரது போர் வைக்குள் வந்து விடுவார்கள். அதற்கான முகராசி யும் கைராசியும் வசிய மருந்தும் அவரிடமிருந்தன. அந்தக் கலையிலும் அவர் கைதேர்ந்தவராகி விட்டார்.

செண்பகாதேவி குகைச்சாமி என்ற பெயர் மாறிக் குற்ருலம் கோயில் பண்டாரம் என்ற பெயரில் முத்து ஐந்தாண்டுகளைக் கழித்தார்.

ஒருநாள் அதிகாலையில் முத்துப்பண்டாரம் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அழகுப் பண்டாரம்—முத்துப் பண்டா ரத்தின் தலைமைச் சீடர், "சாமி! சாமி! எழுந்திருங் கள்!" என்று அவரசமாக அழைத்தார். அழகுப் பண்டாரத்தின் அவசரத்தைக் கண்ட அவர் எழுந்து உட்கார்ந்து, "என்ன அழகு? ஏன் இப்படி அவரசப் படுத்துகிருய்?" என்று கேட்டார்.

"நம்ம கூட்டத்துக்கு ஒரு பொண்ணு வந்தி ருக்குது!"

"எப்போ வந்தது? நீ எங்கே பார்த்தே?"—நன்ருக உட்கார்ந்துகொண்டு ஆவல் பொங்க அழுத்தமாகக் கேட்டார் முத்துப் பண்டாரம்.

"ராத்திரிதான் வந்திருக்கும் போலிருக்குது. அதோ எதிர்த்த தகரப்பிறையில் இப்போதுதான் நானும் பார்த்தேன்."—எதிர் திசையில் கை நீட்டி எட்டிப் பார்த்தார் அழகுப் பண்டாரம்.

"நல்லா இருக்கிருளா?"—சுற்றுமுற்றும் பார்த் துக் கொண்டே மெதுவாகக் கேட்டார் முத்து.

"ரொம்ப நல்லா இருக்கிரு. ஆனு அவளாலே பேச முடியலே. ஒடம்பெல்லாம் தீயாகக் கொதிக் குது. காய்ச்சில் வந்து அவள் கண்திறக்காமெ கிடக்கரு. நீங்க சீக்கிரம் வந்து மருந்து கொடுத்தா நல்லது. நாளையே எழுந்திடுவா"—அழகுப் பண்டா ரம் அவசரப் படுத்தினுர்.

"அப்படியா? இப்பவே வரேன்."

பரபரவென்று படுக்கையை விட்டு எழுந்தார். தலைமாட்டில் இருந்த துணிப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார். புடம்போட்டு நீற்றி வைத்தி ருந்த செந்தூரத்தில் மூன்று சிட்டிகை எடுத்து மூன்று தாள் பொட்டலமாகப் போட்டார். படுத் திருந்த இடத்தில் மற்றப் பொருள்களை வைத்து விட்டு எழுந்து, அழகுப் பண்டாரம் முன்னே செல்ல பின்னே நடந்தார்.

தகரப் பிறையின் சுவர் ஓரத்தில் உடல் முழு வதையும் சேலையால் மூடிப் படுத்திருந்த பெண் ணுக்கு அருகில் அவர்கள் சென்ருர்கள்.

அழகுப் பண்டாரத்திற்கு இரவில் தூக்கமே வருவதில்லை. எந்தப் பெண் எங்கே ஒதுங்குகிருள் என்பதை மிகவும் துல்லியமாகக் கவனித்துக் கொண்டிருப்பார். ஆனுல் எந்தப் பெண்ணிடமும் அவராக முறைதவறி நடந்து கொள்ளமாட்டார். யானை உண்ட கவளத்தில் சிந்திய பருக்கைகள் எறும்புக்கு இரையாவதுபோல் முத்துப் பண்டாரம் சுவைத்துப் போட்ட எச்சில் பழங்களை விடாது உண்பார். இதில் அவர் தவறுவதே இல்லை. இதிலே தான் முத்துப் பண்டாரத்திற்கு அவர் தலைமைச் சீடர் ஆனுர். எனவேதான் இரவில் வந்த இந்தப் பெண்ணைப்பற்றி நன்கு அறிந்து வந்து சொன்னுர்.

"அம்மா! அகிலாண்டம்! கொஞ்சம் எழுந்திரு!" என்று பெயர்கூட தெரிந்து வைத்திருந்த அழகுப் பண்டாரம் அந்தப் பெண்ணை எழுப்பினுர். சிறிது நேரத்திற்குப் பிறகு முகத்தில் மூடியிருந்த சேலையை மெதுவாக விலக்கி விட்டுப் பக்கத்தில் வந்து நின்ற பண்டாரங்கள் இருவரையும் பார்த்துத் 'திருதிரு' வென விழித்தாள். காய்ச்சலின் கடுமையால் அவளால் வாய்திறக்க முடியவில்லை. கண்கள்தான் பேசின.

"என்னம்மா? உடம்பு சரியில்லையா? கவலைப்படாதே! எங்கிட்ட நல்ல மருந்து இருக்குது. எழுந்து இதைச் சாப்பிடு! காய்ச்சல் எல்லாம் பறந்து ஓடிவிடும்" என்று பரிவோடு சொல்லிக் கொண்டே கையிலிருந்த செந்தூரப் பொட்டலங் களில் ஒன்றைப் பிரித்துச் சிறிதே திறந்திருந்த அவளது வாயில் போட்டார். அவள் மெதுவாக வாயை மென்று முகத்தைச் சுழித்தாள்.

"மருந்து கசப்பா இருக்குதாம்மா?...அழகு! கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து கொடு." என்று அழகுப் பண்டாரத்தின் பக்கம் திரும்பினுர். 'எள்' என்று சொல்லுமுன் "எண்ணெயாக" வந்து நிற்கும் அழகு பண்டாரம் உடனே ஓடிச் சென்று பக்கத்தில் யாரோ சமையலுக்காக ஏற்றி வைத்திருந்த அடுப்பிலிருந்து ஒரு குவளையில் சிறிதே வென்னீர் எடுத்து வந்து அவள் வாயில் ஊற்றினுர். அவள் மருந்தை விழுங்கினுள்.

அந்தப் பெண்ணுக்கு வயது இருபத்து மூன்று இருக்கும். செல்வச் செழிப்பில் மிதக்கும் குடும்பத் தில் பிறந்தவளைப்போல் முகச்சாயல், நல்ல இளமை யான உடற்கட்டு, அழகும் இளமையும் சேர்ந்த சுவையான கனி! நாக்கில் நீர் ஊறிற்று முத்துப் பண்டாரத்திற்கு! விரைவில் 'ருசி' பார்க்கத் துடித்தார்.

பக்கத்தில் கிடந்த குழந்தை அப்போதுதான் விழித்துக் கொண்டதுபோல் அழத் தொடங்கியது.

வியப்படைந்த முத்துப் பண்டாரம் "இது யார் குழந்தை?" என்று கேட்டார்.

"இந்த அம்மாவுடையதுதான்!"—அழகு பண்டாரம் பதில் சொன்னார்.

'சிறு குழந்தைதானே! பரவாயில்லை' என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டு "இன்னும் இரண்டு வேளை இந்த மருந்தைச் சாப்பிட்டால் காய்ச்சல் பூரணமாகக் குணமாகிவிடும். மத்தியானமும் இரவிலும் நானே வந்து கொடுப்பேன்" என்று பொருள் பொதிந்த பதிலைச் சொல்லிவிட்டுக் கையோடு கொண்டு வந்திருந்த மருந்துப் பொட்டலங்கள் இரண்டையும் மடியில் வைத்துக் கொண்டு எழுந்தார், முத்துப் பண்டாரம். அவள் நன்றியோடு முகத்தை மூடிக் கொண்டாள்.

பண்டாரங்கள் இருவரும் வந்த வழியே புறப்பட்டார்கள்.

'இன்னும் இரண்டு வேளை மருந்தையும் நானே வந்து கொடுப்பேன்' என்று முத்துப் பண்டாரம் கூறிவந்தது அவள் மேலுள்ள பாசத்தினாலோ பரிதாபத்தினாலோ அல்ல; அவள் மேல் விழுந்த ஆசையினால்தான் அப்படிக் கூறினார். இரண்டுவேளை வந்து அவளிடம் பழகினால் அவளது மனதை நன்கு அறிந்து கொள்ளலாம் என்ற நச்சு எண்ணத்திலேதான்!

வீடுவாசலை மறந்து ஊர்விட்டு ஊர்வந்து கோயிலில் ஒதுங்கும் பெண்கள் பாதை தவறியவர்கள்தான் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். என்றாலும் நேரடியாகக் கேட்டு அவள் மனதைக் கலைத்து விடாமல் சுற்றி வளைத்துப் பேசி வழிவகை தெரிந்து பற்றிப் பிடித்துக் கொள்ளலாம் என்று எண்ணினார்.

தீட்டிய திட்டப்படி, மத்தியானமும் இரவிலும் அவரே சென்று அவளுக்கு மருந்து கொடுத்தார். அப்போதே அவளைப் பற்றி எல்லா விபரங்களையும் கேட்டு அறிந்து கொண்டார்.

இரவில் காய்ச்சல் விட்டு அவள் நன்கு எழுந்து பேசத்துவங்கினாள். ஆனால் களைப்பும் இருந்தது. அவளுக்கு ரொட்டியும் பாலும் வாங்கிக் கொடுத்தார் முத்துப் பண்டாரம்.

இரண்டு நாட்களில் அவள் பூரணமாகக் குணமடைந்தாள்.

மூன்றாம் நாள் இரவில் எல்லோரும் உறங்கி ஊரடங்கிய நேரத்தில் வழக்கம்போல் முத்துப் பண்டாரம் வேட்டைக்கும் புறப்பட்டார். மெதுவாக அந்தப் பெண்ணை நெருங்கினார். அவரது ஆசையைப் புரிந்து கொண்ட அவள் அடிபட்ட பந்துபோல் துள்ளினாள்.

"இதோ பாருங்க! நான் வயிற்றுப் பிழைப்புக்காக வீட்டை விட்டு வெளியில் வந்த பிச்சைக்காரி இல்லே. பெரிய குடும்பத்திலே பிறந்தவதான். உங்களைப் போல ஆசை பிடித்த ஒரு மோசக்காரன் என்னை ஏமாற்றி அலைக்கழித்து விட்டான். அவனை நம்பி ஏமாந்த நான் பல இடங்களிலே பலபேரோடு இருந்தேன். எல்லோரும் என் நிலையைக்கண்டு எனக்கு உதவி செய்ய ஓடிவந்தார்கள். அவர்களால் என் வயிற்றை நிரப்ப முடிந்ததே ஒழிய என் மனதை நிரப்ப முடியவில்லை. நான் துணிந்து பாவச் செயலில் இறங்கினேன் இதோ என் பக்கத்தில் படுத்துக் கிடக்குதே, இது அந்தப் பாவத்திலே முளைத்த சின்னம்தான். என்னுடைய உடல் நிலையும் இதுவும் சேர்ந்துதான் என்னை இந்த இடத்திற்குக் கொண்டு வந்து போட்டுவிட்டது. இது என் பழைய வாழ்க்கை. அதை மறந்து இருக்கிற நேரத்திலே நீங்க வந்து நிற்கிறீங்க! ஒங்கமனசு எனக்கு நல்லா புரியுது. அதற்கு நானும் தயார் தான். ஆனால் ஒரு நிபந்தனை! நான் இனி பழைய நரக வாழ்க்கை வாழ விரும்பல்லே! என்னை யாராவது ஏத்துக்கிட்டு குடும்பம் நடத்தினா நான் அனுபிசகாது கூடவே இருந்து மாடா ஒழைக்கத்தயார். என்னையும் என்குழந்தையையும் காப்பாத்தத் தைரிய முள்ளவங்க எங்கிட்ட வாங்க. அதுக்கு உடன்படாமெ யாரும் எங்கிட்ட நெருங்காதீங்க. மீறி வந்தா, நான் சாவேனே ஒழிய சம்மதிக்க மாட்டேன்" என்று அவள் தனது கசப்பான அனுபவத்தின் முடிவை உறுதியாகவும் இறுதியாகவும் சொல்லி முடித்தாள்.

நெஞ்சில் அடிப்பட்டதுபோல் எதுவும் பேச முடியாமல்—தனது வாழ்வில் என்றும் அடைந்திடாத ஏமாற்றத்தோடு முத்துப் பண்டாரம் தனது இருப்பிடம் நோக்கித் திரும்பினார்.

8

அருவித் தண்ணீரைப் பாசனத்திற்காகப் பிரித்து விடப்பட்டிருந்த ஓடையின் அருகிலுள்ள பாறையில் அமர்ந்து காலைப் பூசையை முடித்து விட்ட முத்துப் பண்டாரத்திற்கு எழுந்து போவதா அல்லது அந்த இடத்திலேயே உட்கார்ந்து விடுவதா என்றே தெரியவில்லை. இரவில் நடந்த நிகழ்ச்சி அவரைத் திக்குமுக்காடச் செய்தது. ஒருவாறு எழுந்து நடந்து இருக்கையில் சென்று அமர்ந்தார். மேற்கொண்டு என்ன செய்வது என்றே அவருக்குப் புரியவில்லை.

அலைபாயும் மனதை அடக்கியாண்டு ஆண்டவனின் பக்கம் செலுத்தி ஆக்கவேலையில் ஈடுபடவே அவர் பூசை செய்தார். ஆனால் அதையெல்லாம் காலில்போட்டு மிதித்து விட்டுக் கடிவாளம் இல்லாத குதிரையைப்போல்—காட்டாற்று வெள்ளம்போல் மனம் கட்டுக்கடங்காது திசை திரும்பி ஓடியது.

"சாமி! இன்னிய பேப்பரைப் பார்த்தீங்களா? நம்ம அரசாங்கம் பிச்சைக்காரங்களுக்கு மறுவாழ்வு கொடுக்கப்போவுதாம்; பாருங்க!" என்று கையிலிருந்த பத்திரிகையை நீட்டிய அழகுப் பண்டாரம் திகைத்துப் போனார். முத்துப் பண்டாரத்தின் தோற்றம் அவரை என்னவோ செய்தது. தன்னைச் சமாளித்துக் கொண்டு, "சாமி! என்ன! ராத்திரி விருந்து பலமோ?" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே மீண்டும் கேட்டார்.

தனக்கும் அந்த விருந்து எப்போது கிடைக்குமோ என்ற ஆசை அவருக்கு!

"அட ஏம்பா! வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிறே?" என்று சலிப்போடு பேசினார் முத்துப் பண்டாரம்.

"என்ன சாமி இது? ஆச்சரியமா இருக்குது? ஒங்களுக்கு இதுவரையிலும் தோல்வியே கிடையாதே! இது ஒரு புது அனுபவமோ?" என்றவர் "ஏஞ்சாமி அவ, சம்மதிக்கலியா?" என்று பரபரப்போடு மெல்லக் கேட்டார் அழகுப் பண்டாரம்.

(வளரும்)

தொடர் கதை :

மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

சொல்லி வரும்போதே, 'ஆ' என அதிர்ச்சியோடு அலறினள் வெள்ளிவீதி.

அவள் கைகள் நழுவின.

துடிதுடித்தாள்.

தவித்தாள்.

தத்தளித்தாள்.

கோடிக்கணக்கான நல்லபாம்புகள் சீறிப் படமெடுத்துச் சாடி அவளுடலின் ஒவ்வொரு அணுவையும் வெறியோடு கடித்து நஞ்சேற்றிப் பிய்த்துப் பிடுங்குவது போலத் துன்புற்றாள்.

வானத்து இடிகளெல்லாம் அவளொருத்தி நெஞ்சிலே ஒரே கணத்தில் வீழ்ந்தாற்போல் அழிந்தாள்.

அவனைவிட்டு விலகிய வெள்ளிவீதி தகாத ஒருவனைத் தழுவியவளைப்போல அதிர்ச்சியோடு புகழேந்தியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினள்.

தீயெனக்கனல் வீசி எரிந்த அவள் கண்களின் தழல்நோக்கைத் தாங்க மாட்டாமல் நாணித் தலை கவிழ்ந்தான் புகழேந்தி.

அவனுள்ளச் சான்று உறுத்தியது; வதைத்தது. துறைமுகம் தாக்கப்பட்டபோது பயணிகள் தவிப்பதைப்போல வெள்ளிவீதி ஏமாற்றத் தவிப்பில் வீழ்ந்தாள்.

அழுகின்ற வெள்ளிவீதியை அணுகவோ, ஆறுதல் கூறவோ ஆண்மையற்றவனாகப் புத்தம் புதியவனாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் புகழேந்தி.

செல்வமெல்லாம் இழந்தவளைப் போலத் தேம்பினள். அவளா அழுதாள்?

இல்லை.

அவள் உயிர் அழுதது; உணர்வு அழுதது; ஊனின் அணுவெல்லாம் அழுதன.

அவள் பட்டாடை குலையவில்லை; கூந்தல் பூக்கள் வாடவில்லை; புத்தணிமணிகள் கலங்கவில்லை; ஆனால்-

அவள் வாடினள்; குலைந்தாள்; கலங்கினள்; சிதைந்தாள்!

பலகணி வாயிலாக வானவெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் புகழேந்தி.

மைபரந்த காரிருள் வானில் அங்குமிங்கும் விண்மீன்கள் மின்னின.

'ஐயோ! நான் ஏன் இந்த உண்மையை இவளிடம் சொன்னேன்? என்ன மடமை! அவள் பிஞ்சு நெஞ்சைத் தீய்த்துவிட்டேனே! வெள்ளிவீதியின் காதலுணர்வையறிந்தபின் இதைக் கூறியிருக்கக் கூடாதுதான்! அப்போது தோன்றவில்லையே! இன்ப இரவைத் துன்ப இரவாக்கி விட்டேனே! அவளின் நம்பிக்கை மரத்தை ஆணிவேரோடு பிடுங்கி எறிந்து விட்டேனே?'' என எண்ணி நொந்தான்' எரிச்சலுற்றான்.

அந்தக் காரிருள் வானம் போன்றே அவன் வாழ்வும் அவள் வாழ்வும் இருளாகிக் கிடந்தது.

அங்கு நேர்ந்த குழப்பத்தை ஆராய வந்தது போலப் பாய்ந்தோடி வந்தது. தென்றற்காற்று. அதை வரவேற்பாருமில்லை; வழிவிடுவாருமில்லை!

வெள்ளிவீதி தரையில் வீழ்ந்த மின்னல் போலத் துவண்டு கவிழ்ந்து விம்மிப் பொருமி அழுது கொண்டிருந்தாள்.

நாற்காலியிலமர்ந்திருந்த புகழேந்தி இருகைகளாலும் தலையைப்பற்றிக் கொண்டு எண்ணரிய துயர்க்கடலிலும் ஏக்கப் புயலிலும் தன்னிலை மறந்து கிடந்தான்!

48

சீரும் செல்வமும் செழிப்பும் வளமும் இன்பமும் கொஞ்சிக் கொழித்த வளமார் நாடு அணுக்குண்டு விழ அழிந்துபாழ்பட்டுச் சுடுகாடாகிப் போனாற்போல வெள்ளிவீதியின் உள்ளம் பாழாகிக் கிடந்தது.

வெறுமைபூத்த ஆள் இல்லாப் பாலைபோல அவள் நெஞ்சம் பாழாகிக் கிடந்தது.

காயும் கண்ணீரைக் கையால் மாற்றவும் கருத்தின்றிச் சோர்ந்து சுவைகுன்றிச் சுருண்டிருந்தாள்.

ஆற்றாமையின் எல்லையாய், அவலத்தின் மொத்தவடிவமாய், ஏக்கத்தின் உறைவிடமாய், ஏமாற்றத்தீவாய், எதிர்பாராத அதிர்ச்சியின் உருவமாய், இரக்கத்தின் ஓவியமாய் வெள்ளிவீதி கிடந்தாள்.

'தன்நிலை இப்படியா ஆகவேண்டும்? என் நெஞ்சைத் தன் நெஞ்சமாய்க் கொள்ளாத அயலவரா என் கணவராக வேண்டும்?'

ஐய்யய்யோ!

விம்மினள்; வெந்தாள்; நொந்தாள்; நைந்தாள்; இடுக்கண் புண்பட்டு உழந்தாள்! அலமற்றாள்! பித்தியானள்; பேதுற்றாள்; புலம்பினள்.

விடியலின் ஒளிவண்ணம் வியப்போவியம் வரைந்து கொண்டிருந்தது.

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் ...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை-8.

நாற்காலியில் அமர்ந்த நிலையிலேயே ஏங்கியுந் தூங்கியும் பொழுதை ஓட்டிய புகழேந்தி திடுக்கிட்டு விழித்தான்.

கவிழ்ந்து படுத்தபடி இன்னும் இரக்கமிக விம்மியழுது கொண்டிருந்த வெள்ளிவீதியின் அருகே வந்தான் புகழேந்தி,

ஏதோ சொல்ல நினைத்தான்.

அவள் நிலை அவன் வாயை அடைத்து விட்டது.

மிகப் பெரிய ஏமாற்றச் சுமையைத் தாங்கியபடி அறையைவிட்டு வெளியேறினான்.

கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்ட வெள்ளிவீதி மெல்ல எழுந்தாள்.

உடலெல்லாம் சொல்ல முடியாத வலி. மண்டை, தலையெல்லாம் கனத்தது; வலித்தது. நெற்றிப் பொட்டுகளில் விண்விண் என வலி எடுத்தது.

கொடிய நோயில் நீண்டகாலம் கிடந்து குமைந்தவளைப்போல வலிகுன்றிச் சோர்ந்து வாடித்தளர்ந்து வருந்தினாள்.

இரவெல்லாம் அழுதழுதும் அவள் ஆற்றாமை ஆறவில்லை; அடங்கவில்லை.

புகழேந்தியின் வாயிலிருந்து கூற்றமென வந்த அந்த உண்மை...அப்பப்பா! எவ்வளவு கொடியவை!

அவள் வாழ்க்கையை, இன்பத்தை, நம்பிக்கையை, அமைதியை, ஆறுதலை, கனவையெல்லாம் சிதைத்துச் சீர்குலைத்து உருவழித் தொழித்து விட்டதே!

உடம்புக்குக் குளிர்காய்ச்சலோ?

தாங்கமுடியாத தலைவலியால் தவித்தாள்; துடித்தாள்.

வீட்டினர் காலைப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஓசையும், பரபரப்பும் கேட்டது.

கலகலப்பான பேச்சுக்களும் சிரிப்பொலியும் வெள்ளிவீதியின் வெறிகொண்ட உணர்ச்சிகளின் மீது சிறிது நீர் தெளித்தன.

தனக்குத்தானே அடக்கத்தை வலிய பூட்டிக் கொண்டாள்.

பொறுமையும் அடக்கமுமே தனது மானம், மதிப்பு, பெண்மை ஆகியவற்றைக்காக்க வேண்டும் என எண்ணினாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டாள். நிலைக் கண்ணாடிமுன் நின்று தன்னுருவைப் பார்த்தாள்.

'பகீர்' என்றது!

ஓரிரவில் இப்படி உடலிளைக்குமா? அழகு குறையுமா? இளமை மறையுமா? இரவு செய்த ஒப்பனைகள் அணுவளவும் குலையவில்லை. ஒப்பனைக் குள்ளிருக்கும் உடல்மட்டும் எப்படிக் குலைந்தது?

(வளரும்)

'குட்டிக் கதைகள் ஒரு நூறு!'

(புலவர். அரிமதி தென்னகன்)

15. யாருடைய விஷம் யாருக்கு ஏறியது?"

வெறி பிடித்த சொறி நாய் ஒன்று வளர்த்தவனையே கடித்து விட்டது.

கடிபட்டவன் கருணை வள்ளல்!

ஒழுக்கசீலன்!!

உத்தமத்தலைவன்!!

ஆம்!!

நாடே அவனைப்பற்றி அப்படித் தான் நினைத்தது.

எனவே,

வெறி நாய் விஷமேறி அவன் செத்து விடுவானோ என்று அந்த ஊரே அழுதது.

நாளும் நாளும் அந்தத் துயரினை எண்ணி அனைவரும் துடித்தனர்.

அந்தநாள் வந்து விடுமோ என்று அனைவரும் அஞ்சினர்.

அந்த நாளும் வரத்தான் செய்தது!!

ஆம்!!

அந்த நாய் செத்து விட்டது.

ஃ ஃ ஃ

16. பொருத்தமானவன்

'இன்டர்வியூ' நடந்து கொண்டிருந்தது.

கணக்கெழுதும் வேலைக்குத் தகுந்த ஆளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார் முதலாளி.

"உண்மையென்றால் என்ன?"

முதலாளி ஒருவனைக் கேட்டார்.

"நடந்ததை, நடந்தபடியே சொல்வதுதான் உண்மை"

அவன் பதில் தந்தான்.

"நீர் போகலாம்"

அவன் போக அடுத்தவன் வந்தான்.

"உள்ளதை உள்ளபடியே சொல்வதுதான் உண்மையா?"

முதலாளியின் கேள்வி இது.

"மற்றவர்களுக்குத் தீமைதரும் என்றால் உள்ளதை உள்ளபடியே சொல்வது உண்மை இல்லிங்க..."

"திருவள்ளுவருக்கெல்லாம் இங்கே வேலை இல்லே; போ...போ"

அவனும் போக அடுத்தவன் வந்தான்.

"மற்றவங்களுக்குத் தீமைதரும் என்றால், உள்ளதை உள்ளபடியே சொல்வது உண்மையா? இல்லையா?"

முதலாளியின் கேள்வி இது.

"அதெல்லாம் தேவையில்லாத ஆராய்ச்சிங்க; நீங்க எதை உண்மையின்னு சொல்றிங்களோ, அதுதாங்க எனக்கு உண்மை"

அவனுக்கு வேலை கிடைத்தது!!

வருமானவரி இலாக்கா முதலாளிக்குத் துரும்பாகி—விட்டது.

ஃ ஃ ஃ

17. பெரிய மனிதர்

"குஷ்டரோகிகளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டது"

பத்திரிகையிலிருந்து படித்துப் பார்த்தவர் கீழ்வருமாறு சொன்னார்:—

"அருமையான திட்டம்; அப்பனைப் போலவே பிள்ளை பிறந்தால் நாடே குஷ்டரோகக் குட்டையாகி விடுமே"

நான்,

"உடல் குஷ்டரோகிகளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்யா விட்டால், அப்பனைப்போல் பிள்ளை பிறக்க, நாடே குஷ்டரோகக் குட்டையாகிவிடும். உண்மை தான்!! மனக் குஷ்டரோகிகளுக்கும் இப்படிக் குடும்பக் கட்டுப்பாடு செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று நினைத்தேன்.

நான் இதை அவரிடம் சொல்லவில்லை. ஏன்?

அந்தக் கட்டுப்பாடு செய்ய வேண்டிய முதல் ஆளே அவர் தானே!!

அவர் என்ன சாதாரண ஆளா? ஊரின் பெரிய புள்ளியே அவர் தானே!!

ஃ ஃ ஃ

18. எமன் ஏன் இறந்தான்

எமனுக்குக் கோபகோபமாக வந்தது; உலகில் ஒழுக்கம் கெட்டு விட்டது என்று தூதுவன் சொன்ன சேதி கேட்டு எமன் துடித்தான்!!

தன்னுடைய தூதுவர்களையெல்லாம் அழைத்தான்.

"ஈரேழு பதினான்கு உலகங்களிலும் உள்ள ஒழுக்கங் கெட்டவர்களையெல்லாம் உடனே இழுத்து வாருங்கள்"

எமன் ஆணையிட்டான்.

அடுத்த விநாடி,

எல்லா தெய்வங்களும் கைதிகளாக எமலோகத்தில் காட்சி தந்தனர்.

அவ்வளவுதான்!!

எமன் இறந்து விட்டான்!!

ஃ ஃ ஃ

19. சோழியன் குடுமி...?

திடீரென்று அவனுக்கு இலக்கியத்தில் ஆர்வம் பிறந்து விட்டது.

இலக்கியங்களிலும் அவன் விரும்பியது,

சிலப்பதிகாரம்!!

அவன் தன்னை ஒரு சிலம்புச் செல்வராகவே நினைத்துக் கொண்டான்.

தன் மனைவியை அழைத்துக் கொண்டு சிலப்பதிகார மாநாடுகளுக்குப் போனான்.

சிலப்பதிகாரப்பட்டி மண்டபங்கள் எங்கு நடைபெற்றாலும் தம்பதி சமேதராய் அவனைக் காணலாம்.

தன் மனைவியைச் சிலம்பதிகாரம் படிக்கச் சொன்னான்.

அவளுக்கு,

கணவனின் இலக்கியத் திடீர்க் காதல் பற்றிச் சந்தேகம் இருந்தாலும்,

என்னவாக இருக்கும் என்பதற்கு மட்டில் பதில் கிடைக்கவில்லை.

ஒருநாள்,

அவன் அவளிடம்,

"மாதவியிடம் கோவலன் போன பிறகும் கண்ணகி கணவன் மீது கோபம் கொள்ளாமல், குறைகாணாமல் இருந்தாளே

அந்தப் பகுதிதான் சிலப்பதிகாரத்திலேயே நான் சுவைத்த இடம்" என்றான்.

ஒருவாறு அவளுக்குச் சிலப்பதிகாரத் திடீர்க் காதலுக்குக் காரணம் புரிந்து விட்டது.

தன் கணவன் தன்னிடம் சிலப்பதிகாரப் பிரச்சாரம் செய்ததற்கான உண்மையை அவள் நன்கு உணர்ந்து கொண்டாள்.

அவள் சொன்னாள்,

"கண்ணகியைப் பிரிந்த கோவலன், காசெல்லாம் போன பிறகு, கட்டியவளின் காலடியே சொர்க்கம் என்று வந்தானே, அந்த இடம் எனக்குப் பிடித்த பகுதி; ஆண்களுக்குச் சரியான பாடம்"

அவனுக்கு அந்த நம்பிக்கை போய் விட்டது.

நல்லவேளை,

யாரோ ஒரு மாதவி பிழைத்துக் கொண்டாள். ஃ

நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்! இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
[illegible] வெளியிடப்படுகிறது.